(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 60.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2010, திசெம்பர் 06, திங்கட்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0229/ '10

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல வலயக் கல்விக் காரியலயத்திற் குட்பட்ட வலஸ்முல்ல கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்திற்குரிய பாடசாலைகளில் மிகையான ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறான பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iv) பற்றாக்குறை நிலவுவது எந்தப் பாடங்களுக்கு என்பதையும்,

(v) இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0315/ '10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பில் 'ஐபா' நிகழ்ச்சியினை நடத்துவதற்கு இலங்கை இணங்கிய திகதியினையும்,

(ii) நிகழ்விற்கு நிதி வழங்கிய தரப்பினையும்,

(iii) பணம் பெறப்பட்ட திகதியினையும்,

(iv) மேலேயுள்ளவாறு பணம் செலுத்தப்படாவிட்டால், செலவினை ஏற்றுக் கொண்டவர் யார் என்பதனையும்,

(v) நிகழ்ச்சிக்கான மொத்தச் செலவினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) (i) 'ஐபா' நிகழ்ச்சியினால் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளையும்,

(ii) அவ்வாறான நன்மைகள் கிடைத்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0330/ '10

3\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 20 வருடங்களில் நெடுஞ்சாலைகளை நிருமாணிப்பதற்காக வாருடாந்தம் அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளினளவை வெவ்வேறாகவும்,

(ii) அவற்றுக்காக செலுத்தப்பட வேண்டிய நட்டடஈட்டுத்தொகையின் அளவு என்னவென்பதையும்,

(iii) அதல் இதுவரையில் செலுத்தி முடிந்துள்ள தொகையினளவு என்ன என்பதையும்,

(iv) இன்னும் செலுத்துவதற்காக எஞ்சியுள்ள தொகையினளவு என்ன என்பதையும்,

(v) அவை எப்பொழுது செலுத்தி முடிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு தெறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0828/ '10

4\.

கௌரவ விக்டர் அன்ரனி,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சிலாபம் மீன்பிடித் துறைமுகத்தின் நிர்மாணப்பணிகள் முழுமையாகப் பூர்த்தியடைந்துள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பொது மீன் சந்தையில், ஏலச் சந்தைக்கான கட்டிடமொன்றை நிர்மாணித்தல், சிலாபம் மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்தில் உள்ளடங்குகின்றது என்பதையும்,

(ii) ஏதேனுமொரு காரணத்தினால் மேற்படி ஏலச் சந்தைக் கட்டிடம் நிர்மாணிக்கப்படவில்லை என்பதையும்,

(iii) மேற்படி பொது ஏலச்சந்தை நிர்மாணிக்கப்படாமையினால் மேற்படி மீன்பிடித் துறைமுகத்தின் பெறுமதி வெகுவாகக் குறைந்துள்ளதென்பதையும்,

(iv) பெருமளவு நிதியைச் செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட மேற்படி மீன்பிடித் துறைமுகத் தொகுதியில், நுகர்வோருக்கு அல்லது மீனவர்களுக்குத் தேவையான நீர்வசதிகளோ, மலசல கூட வசதிகளோ இல்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அவர் துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0230/ '10

5\.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பந்தோட்டை வலயக் கல்விக் காரியலயத்திற் குட்பட்ட சூரியவெவ கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்திற்குரிய பாடசாலைகளில் மிகையான ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறான பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iv) பற்றாக்குறை நிலவுவது எந்தப் பாடங்களுக்கு என்பதையும்,

(v) இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0444/ '10

6\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த ஐந்து வருடங்களிலே தோற்றுப்போன நிதிக் கம்பனிகளாக அறிவிக்கப்பட்ட நிதிக்கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வைப்பாளர்களைப் பாதுகாப்பது இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பு என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) வைப்பாளரின் பணத்தைப் பெற்றுக்கொண்ட கம்பனிகளால் அப்பணம் திருப்பிச் செலுத்தப்படாத வைப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையையும்,

(ii) பணம் திருப்பச் செலுத்தத் தவறிய அல்லது கடமை தவறிய கம்பனிகளையும்,

(iii) மத்திய வங்கி தலையிட்டு, எந்தக் கம்பனியும் வங்குரொத்து அடையாது என உறுதியளித்த பின்னரும் 2010.06.01 இல் எவ்வாறு IFC மற்றும் CIFC வைப்பாளர்கள் தம் சேமிப்புக்களை இழந்தார்கள் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தனித்தனியாகத் தெரிவிப்பாரா?

(ஈ) (i) கம்பனி பணியாளர்களுக்கு என்ன நடந்தது என்பதையும்,

(ii) இந்நிதிக் கம்பனிகளின் வங்கி அறிக்கையிடல் என்று வரும் பொழுது, வேறுபட்ட பணிப்பாளர்களுக்கு வேறுபட்ட நியமங்கள் பிரயோகிக்கப்படுவது ஏன் என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0575/ '10

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற தொண்டர் ஆசிரியர்களின் எண்ணிக்கை பாடசாலை வகைப்படுத்தலுக்கிணங்க தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் அமுலாக்கப்படுகின்றதா என்பதையும்,

(iii) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கல்வியமைச்சின் சுற்றறிக்கை 2008/50 பகுதி 2 இன் (vi) வது பிரிவில் அடங்குகின்ற தொண்டர் ஆசிரியர்கள் இதுவரை நிரந்தர சேவையில் அமர்த்தப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், இவர்களை சேவையில் நிரந்தரமாக்கல் சம்பந்தமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0829/ '10

8.

கௌரவ விக்டர் அன்ரனி,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிலாபம் மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ், கழி முகத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் நாள்தோறும் கழிமுகத்தின் மணலை அகற்றும் இயந்திரமொன்றினை ஈடுபடுத்தல் வேண்டும் என்பதையும்,

(ii) அதன்படி, மேற்படி கழிமுகத்தின் மணலை அகற்றுவதற்காக பயன்படுத்தப்பட்ட மேற்படி கருத்திட்டத்திற்குச் சொந்தமான இயந்திரம், மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் திறந்து வைக்கப்பட்டு ஒரு வாரம் கழிவதற்கு முன்னர் மீள எடுத்துச் செல்லப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) மேற்படி இயந்திரம் இல்லாமையினால், கழிமுகத்தில் எப்போதும் மணல் நிரம்புவதன் காரணமாக மீனவர்களுக்கு அதிக நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட மணல் அகற்றும் இயந்திரம் மீள எடுத்துச் செல்லப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(ii) தற்போது தடைப்பட்டுள்ள கழிமுகத்தின் மணலை, தற்காலிகமாகவெனினும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) — (ஒதுக்கப்பட்ட பன்னிரெண்டாம் நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 04)

* 2.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 3.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 4.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 5.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— 1956 ஆம் அண்டின் 47 ஆம் இலக்க, பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 20அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 31 ஆம் பிரிவின் கீழ், அச்சட்டத்தின் 20அ ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க, தொழில் உறவுகள், விளைவுப்பெருக்க மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2010, ஓகத்து மாதம் 20 ஆம் திகதி 1667/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2010.11.09ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)" பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டத்தின் 39ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65ஆம் பிரிவின் கீழ், காணி, காணி அபிவிருத்தி, குடியிருப்பு மற்றும் போர் வீரர் நலனோம்புகை அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2005, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "2005 நில அளவைச் சபை (பதிவு) பிரமாணத்தின்" 2(2) ஆம் பந்தியை திருத்துவதற்காக 2010, ஏப்பிரல் மாதம் 12 ஆம் திகதிய 1649/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2010.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

பின ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

இலங்கை செமட்ட செத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

மகேஸ்வரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) என்னும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களளைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் காண்க.